# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2393 - 2024 ජූලි මස 12 වැනි සිකුරාදා - 2024.07.12

*2393 ஆம் இலக்கம் – 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1622 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1616 | ஏல விற்பனைகள் | – |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1619 | நானாவித அறிவித்தல்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024,ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1615 - B 082588 - 5,403 (2024/07)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்- கிளிநொச்சி

## கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், மின்பாவனைப் பொருட்கள், சவள்கள் மற்றும் மண்வெட்டிகள் பகிரங்க ஏல விற்பனை செய்தல்

1. கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், மின்பாவனைப் பொருட்கள், சவள்கள் மற்றும் மணவெட்டிகள் 2024.07.27 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு இந்நீதிமன்ற வளாகத்தினுள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படும்.

2. ஏல விற்பனைக்கு உட்படுத்தப்படும் பொருட்களை உரிமை கோருபவர்கள் யாராவது இருக்குமிடத்து ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் தமது கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஏல விற்பனைப் பொருட்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் இம்மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

4. ஏல விற்பனைக்கு உட்படுத்தும் பொருட்களுக்கு உரிய கேள்வி இல்லாதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே கொண்டுள்ளது.

5. ஏல விற்பனையில் விற்கப்பட்ட பொருட்களுக்குரிய பணத்தை உடன் செலுத்தி, பொருட்களை நீதிமன்ற வளாகத்திலிருந்து உடனடியாக அப்புறப்படுத்தப்படல் வேண்டும். கொடுப்பனவுகள் பணமாகவே செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் செல்லுபடியான ஆவணங்களுடன் பிரசன்னமாக இருத்தல் வேண்டும்.

காயத்திரி சைலவன்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
கிளிநொச்சி.

## மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்- கிளிநொச்சி

### ஏலத்தின் பட்டியல்

| தொ. இல. | வழக்கு இலக்கம் | | | இலக்கம் | பொருளின் வகை | நிலைமை |
|---|---|---|---|---|---|---|
| | பிராது | B அறிக்கை | AR அறிக்கை | | | |
| 01. | | | 337/23 | BIK 1825 | Bajaj pulsar 50 | உதிரிப்பாகங்கள் |
| 02. | | | 339/23 | HW 8258 | Lifan | உதிரிப்பாகங்கள் |
| 03. | | | 153/23 | WA 9540 | H/H puleasure | பதிவுசெய்ய முடியும் |
| 04. | | | 553/18 | BFP 4202 | Bajaj platina | பதிவுசெய்ய முடியும் |
| 05. | | | 290/21 | TH 0701 | Honda Supercup | உதிரிப்பாகங்கள் |
| 06. | | | 1558/21 | GP 4280 | Bajaj Boxer | உதிரிப்பாகங்கள் |
| 07. | 21061 | | | JY 8671 | TVS Victor | உதிரிப்பாகங்கள் |
| 08. | | | 1095/18 | JT 2500 | H/H CD Dawn | உதிரிப்பாகங்கள் |
| 09. | 37072 | | | 149- 3870 | Honda MD 90 | உதிரிப்பாகங்கள் |

| தொ. இல. | வழக்கு இலக்கம் | | | இலக்கம் | பொருளின் வகை | நிலைமை |
|---|---|---|---|---|---|---|
| | பிராது | B அறிக்கை | AR அறிக்கை | | | |
| 10. | 30410 | 311/18 | | MF 5761 | H/H Passion plus | உதிரிப்பாகங்கள் |
| 11. | | 469/17 | | BDE 2826 | Hero Dawn | உதிரிப்பாகங்கள் |
| 12. | 29819 | 136/18 | | HL 8903 | TVS Fiero | உதிரிப்பாகங்கள் |
| 13. | 31884 | 171/17 | | WP 8305 | Diado | உதிரிப்பாகங்கள் |
| 14. | 20489 | | | XF 5580 | H/H CD Dawn | உதிரிப்பாகங்கள் |
| 15. | 26232 | | | BDK 9266 | Bajaj pulsar 150 | உதிரிப்பாகங்கள் |
| 16. | 12482 | 461/14 | | HT 2617 | H/H Passion plus | உதிரிப்பாகங்கள் |
| 17. | | | 1557/21 | TA 1388 | TVS GLX | உதிரிப்பாகங்கள் |
| 18. | | | 553/18 | XB 8465 | Bajaj Discover 150 | உதிரிப்பாகங்கள் |
| 19. | 27724 | | | GV 2707 | Yamaha YBX | உதிரிப்பாகங்கள் |
| 20. | 30761 | | | BGN 1375 | Hero HF Deluxe | பதிவுசெய்ய முடியும் |
| 21. | 21465 | | | GZ 2413 | H/H Glamour | உதிரிப்பாகங்கள் |
| 22. | 20648 | | | BCE 1881 | Hero Dawn | உதிரிப்பாகங்கள் |
| 23. | 27176 | | | 1445420 | H/H/ CD 100 | உதிரிப்பாகங்கள் |
| 24. | 22184 | | | GW 4880 | H/H Dawn | உதிரிப்பாகங்கள் |
| 25. | | | 1095/18 | GN 7833 | H/H Splender | உதிரிப்பாகங்கள் |
| 26. | | | 271/21 | JK 7336 | Bajaj BYK | உதிரிப்பாகங்கள் |
| 27. | | | 272/21 | VL 7409 | Bajaj pulsar 150 | பதிவுசெய்ய முடியும் |
| 28. | | | 274/21 | WV 6877 | BajajDiscover 150 | பதிவுசெய்ய முடியும் |
| 29. | | | 276/21 | JK 0673 | H/H Passion plus | பதிவுசெய்ய முடியும் |
| 30. | | | 279/21 | WT 5699 | Bajaj Discover DTS SI | பதிவுசெய்ய முடியும் |
| 31. | | | 1398/20 | UA 1259 | Bajaj CT 100 | பதிவுசெய்ய முடியும் |
| 32. | | | 1678/20 | MF 3480 | H/H CD Dawn | உதிரிப்பாகங்கள் |
| 33. | | | 243/20 | VY 2903 | H/H Passion PRO | பதிவுசெய்ய முடியும் |
| 34. | | | 1096/19 | HZ 9385 | TVS Victor GL | பதிவுசெய்ய முடியும் |
| 35. | | 1272/19 | | WW 2247 | Bajaj pulsar 135 LS | பதிவுசெய்ய முடியும் |
| 36. | 27650 | 926/17 | | N/A | TVS Heavy Duty | உதிரிப்பாகங்கள் |
| 37. | 31662 | | | PR 5715 | TATA 207 DI | பதிவுசெய்ய முடியும் |
| 38. | | | 1625/22 | S.N 403260180 | தண்ணீர் பம்ப் | |
| 39. | | | 1625/22 | S.N HM 158-16-3811 | தண்ணீர் பம்ப் | |
| 40. | | | 1625/22 | S.N 210354 | தண்ணீர் பம்ப் | |
| 41. | | | 1625/22 | S.N GOM 691643 FMX | விவசாய நீர் பம்ப் | |

| தொ. இல. | வழக்கு இலக்கம் | | | இலக்கம் | பொருளின் வகை | நிலைமை |
|---|---|---|---|---|---|---|
| | பிராது | B அறிக்கை | AR அறிக்கை | | | |
| 42. | | | 1625/22 | S.N GOM 6940576 IMX | விவசாய நீர் பம்ப் | |
| 43. | | | 1626/22 | S.N.E 32DM 11002003028700502 | தொலைக்காட்சி | |
| 44. | | | 1626/22 | S.N.HTRU 91HC 603486E | மடிக்கணினி NP 300E5C | |
| 45. | | | 1626/22 | IMEI No. 356748971504380 | ஸ்மார்ட்போன் TA 1352 | |
| 46. | | | 2197/22 | 69936333 | பெண்கள் சைக்கிள் | |
| 47. | | | 131/23 | 69927743 | சைக்கிள் | |
| 48. | | | 155/23 | S.N.M 100890815 | Lucas battory | |
| 49. | | | 366/23 | S.N.G 4 J 7309487 IMX | விவசாய நீர் பம்ப் | |
| 50. | | | 388/23 | IMEI No. 353120117925643 | நொக்கியா TA 1203 | |
| 51. | | | 648/23 | 57178500 | பெண்கள் சைக்கிள் | |
| 52. | | | 739/23 | ஸ்மார்ட் போன் M 2101K6G | ஸ்மார்ட் போன் றெட்மி | |
| 53. | | | 838 23 | | கியர் மற்றும் உதிரிப்பாகங்கள் | |
| 54. | | | 839/23 | 169632/11 | பெண்கள் சைக்கிள் | |
| 55. | | | 859/23 | IMEI No. 861171036843396 | ஸ்மார்ட் போன் | |
| 56. | | | 1211/23 | IMEI No. 867542020754241 | ஸ்மார்ட் போன் SCC 421 | |
| 57. | | | 1212/23 | S.N32DM 110021020 | தொலைக்காட்சி மெச்சிமோ | |
| 58. | 53213 | 15/23 | | | தேங்காய்த் துருவி | |
| 59. | முடிவடைந்த வழக்குகள் | | | | சவள்கள் -100 | |
| 60. | முடிவடைந்த வழக்குகள் | | | | மண்வெட்டிகள் -12 | |

07- 377

# ஆய விற்பனையும் குத்தகையும்

## பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை -2025

*2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2025ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய 2024, ஆவணி 27ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. கள்ளுத் தவறணை குத்தகையை வாங்க முன்வருபவர் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை எந்தவொரு பிரதேச செயலகத்தின் சிறாப்பர் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக் கொண்ட பெறுமதிச் சான்றிதழை காகித உறையிலிட்டு முத்திரை பொறித்து இடப்பக்க மேல் மூலையில் தான் விலைகோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டுஅட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ இப்பிராந்திய செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழி வகுக்கலாம்.*

*3. கேள்விப்பத்திரம் நிரப்பும் போதுண்டாகும் சகல திருத்தங்களும் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த வேண்டும். அப்படியில்லாக் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியான 2024.08.27 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.*

*5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப்பத்திரத்தையோ எல்லாப் பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை பன்னல பிரதேச செயலாளருக்கு உரியதாகும்.*

*6. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அத்திகதி பி.ப.2.00 மணிக்கு முன் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளரினால் கூறும் தொகையை வைப்புப் பணமாக செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.*

*7. 2025ஆம் ஆண்டுக்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்படமாட்டாது. அந்த நிலையம் பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பன்னல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*8. 2024.08.27 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2024.09.24 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஆய விற்பனை இதே அலுவலகத்தில் நடைபெறும்.*

*9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*10. இந்த அறிவிப்பின் சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் சிங்கள உரையே மேலோங்கும்.*

*ஆர்.எம்.எஸ். விக்ரமரத்ன பண்டார,*
*பிரதேச செயலாளர்,*
*பன்னல.*

*பிரதேச செயலகம்,*
*பன்னல,*
*2024, யூன் 24.*

**அட்டவணை**

**பன்னல பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை - 2025**

| தொடர் இல. | பகுதி | தவறணை திறந்திருக்கும் பரப்பளவு | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திர இறுதி தினம்/நேரம் | தவறணை திறந்திருக்கும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.கிரிஉல்ல | கடுகம்பல பிரிவு | மாஹரகம/ ஹால்பனே (1566 மாஹரகம பிரிவில்) | 3,500 | 2024.08.27 முற்பகல் 10.30 | மு.ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 5.00 மணி வரை |

07-362

---

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவின் 2025 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை**

2025, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2024.08.16 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் 5000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் படிவத்தின் கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரத்தின் பெறுமதியில் 25% இற்கு மேற்பட்ட வருமானச் சான்றுப்பத்திரத்துடன் முகவரிடப்பட்ட முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் தங்களால் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த தவறணைக்காவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களைப் பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2024.08.16ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்தப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2024.09.13ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒருவர் சுய உரித்தினைப் பெற்றுக்கொண்டாரென பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக அவர் பதுளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாதக் கட்டணத்திற்கும் கூடுதலான தொகையை வைப்புப் பணமாக என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை பதுளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

துஷாரி அனுராதா நாணயக்கார,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2024, யூன் 05.

**அட்டவணை**

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைதொடர்பான விபரம் - 2025**

(2025.01.01 ஆந் திகதி தொடக்கம் 2025.12.31 ஆந் திகதி வரை)

| கள்ளுத் தவறணை யின் பெயர் மற்றும் முகவரி | பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கப்படும் நேரம் | கள்ளுத் தவறணை மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|
| பதுளை இலக்கம் 01 கள்ளுத் தவறணை | பதுளை | பதுளை மாநகர சபை இல. 6 ஆம் பிரிவில் ஹூணுகொடுவ எனும் அரச காணி | மு. ப. 10.00 | பி. ப. 9.00 | ரூ. 5,000 | 2024.08.16ஆந் திகதி மு. ப. 10.30 |

**மீண்டும் விற்பனை செய்யப்படும் திகதியும் நேரமும்:-** சிறந்த கொள்வனவாளர் முன்வராவிடின் 2024.09.13 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.

07-366

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## நிர்மாயா வென்சர்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்
## முன்பு நிர்மாயா ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்
## (கம்பனி பதிவு இலக்கம் பீவீ 116106)

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி நிர்மாயா ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் ( முன்னைய பெயர்) என்ற அதன் பெயரை நிர்மாயா வென்சர்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் ( புதிய பெயர்) என 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி ( கம்பனி பதிவு இலக்கம் பீவீ 116106) இன் கீழ் தன் பெயரை மாற்றம் செய்துள்ளது என்பதையும் இத் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கந்தையா நீலகண்டன் கட்டிடம் ( 4 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 00300 என்ற முகவரியில் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.*

*சசிதேவி நீலகண்டன்,*
*பணிப்பாளர்.*
*என் அன்ட் என் கோர்பரேட்*
*சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடெட்,*
*(கம்பெனியின் கம்பெனிச் செயலாளர்கள்).*

*கந்தையா நீலகண்டன் கட்டிடம் ( 4 ஆம் மாடி),*
*இல. 2, டீல் பிளேஸ்,*
*கொழும்பு 00300.*

*07- 373*

---

## ரெம்பெஸ்ற் பிஈ பார்ட்னேர்ஸ் ( பிரைவட்) லிமிடெட்

## TEMPEST P E PARTNERS (PRIVATE) LIMITED

### கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு பற்றிய பொது அறிவித்தல்

*ரெம்பெஸ்ற் பி ஈ பார்ட்னேர்ஸ் ( பிறைவட்) லிமிடெட்டின் ( கம்பனி பதிவு இலக்கம் PV 111268) சொல்லப்பட்ட மூலதனம் நூற்று இருபது மில்லியன் ரூபாவிலிருந்து ( ரூபா 120,000,000) ஐம்பத்தைந்து மில்லியன் ரூபாவுக்கு ( ரூபா 55,000,000) குறைக்கப்படும் எனவும் பங்குதாரருக்கு ரூபா அறுபத்தைந்து மில்லியன் ( ரூபா 65,000.000) ஆகிய ஒரு தொகை திரும்பக் கொடுக்கப்படும் எனவும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் விதிகளுக்கு ஏற்ப இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.*

*ரெம்பெஸ்ற் பி ஈ பார்ட்னேர்ஸ் ( பிரைவட்) லிமிடெட்டின் சபையின் கட்டளைப்படி,*

*எஸ் எஸ் பி கோப்பரேற் சேர்விசெஸ் (பிறைவட்) லிமிடெட்,*
*செயலாளர்கள்.*

*07- 384*

---